திருநெல்வேலியில் பட்டு உற்பத்திப் பண்ணைகள்

* 383 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு தொழில்—மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் மேலும் புதிய பட்டு உற்பத்திப் பண்ணைகள் ஏற்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக பட்டு உற்பத்திப் பண்ணை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, குற்றாலத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில், குற்றாலம் செங்கோட்டைதான் பட்டு உற்பத்திக்கு ஏற்ற இடம் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குரிய முறையில் விரிவாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. அதை உடனடியாகச் செயல்படுத்த அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செங்கோட்டையில் அந்த பார்ம் அட்மினிஸ்டிரேடிவ் சென்டராக இருந்து வருகிறது. மற்ற விவரங்கள் இப்போது இல்லை.

Wages for Plantation Labour

* 384 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether it is a fact that the rates of minimum wages for workers of rubber, tea and coffee plantations in the State has been revised ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தோட்டத் தொழிலாளருக்கான குறைந்தபட்ச ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது குறித்து அவசியமான விசாரணை செய்து மாநில அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக, ஒரு குழு 30-5-1974 நாளிட்ட தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறையின் அரசாணை எண். 427-ன்படி நிறுவப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், ரப்பர் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான குறைந்தபட்ச ஊதியமும் கிடையாது. அந்தப் பணியில் இருப்பவர்களுக்கு அன்-ஸ்கில்ட் ஒர்க்கரை

விடக் குறைவாக—3 ரூபாய்க்கும் குறைவாகக் கொடுக்கிறார்கள். அதே மாதிரி காப்பி பிளான்டேஷன் தோட்டத்தில் கேரளாவில் ரூ. 4.20 என்று சொன்னால், நம்முடைய மாநிலத்தில் ரூ. 3.70 ரூபாய் கொடுக்கப் படுகிறது. ஆகவே, 4 மாதத்திற்கு ஒரு தடவை பரிசீலித்து அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ரப்பர் மரத்தி லிருந்து தினமும் பால் இறக்க முடியும். காப்பி, டீ, தினம் வருகிற சமாசாரம் இல்லை. 4 மாதத்திற்கு ஒரு குழு அமைத்து பரிசீலிப்பது என்பது சரியாக வராது. அரசு சும்மா இருக்கவில்லை. 12-2-1975-ல் திரு. பார்த்தசாரதி, டெபுடி லேபர் கமிஷனர் தலைமையின்கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் கொடுத்த பரிந்துரையின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தம் எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் ஒப்புக்கொண்டு கையெழுத்திடப்பட்டிருக்கிறது. காப்பி, தேயிலைபற்றி அரசாங்கம் நட வடிக்கை எடுத்திருக்கிறது. ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் பற்றி இன்னும் பிரச்சினை வரவில்லை. ரப்பர் பிரச்சினை வந்த பிறகு, அதற்கான காரியங்களை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கி றேன். என்னுடைய ஆலோசனை கூட இல்லாமல் அவர்கள் கலந்தார்கள். எல்லா தொழிற்சங்கங்களும் ஒப்புக் கொண்டு ஒரு ஒப்பந்தத்தை நிறை வேற்றி இருக்கிறார்கள். கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றி நாம் வாதிடத் தேவையில்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தக் குழுவிலே யார் யார் இருக்கிறார்கள், இந்தக் குழுவின் ரிப்போர்ட்டை எவ்வளவு நாளைக்குள் சமர்ப்பிக்க வேண்டும், அந்தக் குழு எது பற்றி விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதிலே தொழில் அதிபர்களும், தொழிலாளர் பிரதிநிதிகளும் அடங்கியிருக்கிறார்கள். குழு உறுப்பினர் களின் பட்டியல் பெரிய பட்டியலாக இருக்கிறது. எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் இருக்கிறார்கள். அதே போல் தொழில் அதிபர்களும் பல பேர் அதிலே அங்கம் பெற்று இருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த மலைத்தோட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் ஊதியம் மிகமிகக் குறைந்த ஊதியம். வாரத்திற்கு 15 ரூபாய்க்கு மேல் கிடைப்பது இல்லை. அவர்களுக்கு அண்டை மாநிலங்களில் குறைந்த விலையில் அரிசி வழங்கப் படுகிறது. ஆகவே, அந்தக் குழு ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கிற வரையில், குறைந்த விலையில் உணவுப் பொருள் வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நான் ஏற்கெனவே சொன்னது போல், தொழிற் சங்கத் தலைவர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். யார் யார் அங்கே அங்கம் வகிக்கிறார்கள் என்று சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு).